**07.01.2025**

**தொ.த.சா.1 - சரவணன் (குறுக்கு விசாரணை தொடர்ச்சி)**

ஏற்கனவே நான் குறுக்கு விசாரணையின்போது கோவிட் காரணமாக தொழிற்சாலை மூன்று வருடங்களாக இயங்கவில்லை என்று கூறியிருந்தேன் என்றால் சரிதான். என்னுடைய நிருபண வாக்குமூலம் பக்கம் -2 பத்தி மூன்றில் கோவிட் காலகட்டத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் நிர்வாகம் குறிப்பிட்ட சில தொழிலாளர்களுக்கு மட்டும் வேலை வழங்கியுள்ளதாக கூறியுள்ளேன், அந்த குறிப்பிட்ட நபர்கள் யார் என்று என்னுடைய மனுவிலோ, நிருபண வாக்குமூலத்திலோ, தொழிலாளர் நல அலுவலர்முன்போ, நான் விவரங்கள் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். 2020ற்கு பின்பு நிறுவனம் செயல்பட்டதா என்று நான் சென்று பார்க்கவில்லை. நிர்வாகம் செயல்பட்டதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிர்வாகம் வாய்மொழி மூலமாகவோ, எழுத்து மூலமாகவோ என்னை பணிநீக்கம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தினக்கூலி அடிப்படையில்தான் வேலை செய்துவந்தேன் என்றும், லாக்டவுன் காலத்திற்கு பின்னிட்டு வேறு ஒரு நிறுவனத்தில் நல்ல பணியில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. 12(3) ஒப்பந்தத்தின் படி நான் எந்த தொழிற்சங்கத்திலும், உறுப்பினராக இல்லாததால் 12(3) ஒப்பந்தம் என்னை கட்டுபடுத்தாது என்றால் சரியல்ல. பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்குடன் பிறர் தூண்டுதலின்பேரில்,பொய்யான நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மனுவானது உண்மைக்கு புறம்பானது, தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

Sd/Tmt. S. Uma Maheswari,
Presiding Officer,
Principal Labour Court, Vellore.